செ.வெ.எண்: 01 நாள்:01.09.2020

**கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்படும் பகுதிகளில் காய்ச்சல் முகாம்களை அதிகப்படுத்த அலுவலர்களுக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் அறிவுரை.**

---

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களின் கோயம்புத்தூர் மாவட்ட முகாம் அலுவலகத்தில் இன்று(01.09.2020) கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பணிகள் மற்றும் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் தொடர்பாக மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் அனைத்துறை அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார். இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., மாநகர காவல் ஆணையர் திரு.சுமித்சரண் இ.கா.ப., மாநகராட்சி ஆணையாளர் திரு.பெ.குமாரவேல்பாண்டியன் இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அர.அருளராசு இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்(பொ) திரு.ரூபன்சங்கர்ராஜ், மாநகராட்சி துணை ஆணையாளர் திருமதி.மதுராந்தகி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர்(பொ) மரு.காளிதாசு, இ.எஸ்.ஐ மருத்துவமனை முதல்வர் மரு.நிர்மலா, துணை இயக்குநர்(சுகாதாரப்பணிகள்) திரு.ரமேஷ்குமார் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**பின்னர் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,**

உலகளவில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சையளித்து வருவதால், விரைவாக குணமடைந்து வருகிறார்கள். சிகிச்சைக்குபின் குணமடைந்து வீடு திரும்புவோர் சதவீதம் அதிகமாகவும், நோய்த் தொற்றினால் ஏற்படும் உயிரிழப்பு மிகக்குறைவாகவும் இருந்து வருகிறது.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருவதுடன், தேவையான தளர்வுகளுடன் பொது முடக்கத்தை மிகவும் கவனமாகவும், பாதுகாப்பாகவும் அமல்படுத்தி வருகிறார்கள்.

அதன்படி, தற்போது பொதுபோக்குவரத்து மாவட்டங்களுக்குள் அனுமதிக்கபட்டுள்ளதால், பேருந்துகளில் ஓட்டுநர், நடத்துனர், மற்றும் பயணிகள் கட்டாயம் முகக்கவசம் அணியவேண்டும். பயணிகள் ஏறுவதற்கு ஒரு வழியும், இறங்குவதற்கு ஒரு வழியும் பயன்படுத்துவதையும், கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுக்கும் வகையில், சமூக இடைவெளியிட்டு பயணம் மேற்கொள்வதையும், கண்காணித்திடவேண்டும்.

மேலும், பிற மாவட்டங்களுக்கு பயணம் மேற்கொள்ள இ-பாஸ் நடைமுறை ரத்து செய்யப்பட்டுள்ளதால், தொழில் துறையினர் மற்றும் பொதுமக்களும் தங்கள் பணிகளை மேற்கொள்ள உதவியாக இருக்கும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தனியார் மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு தராமான சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்யவும், கண்காணித்திட ஒருங்கிணைப்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள், தனியார் மருத்துவமனைகளில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற வரும் நோயாளிகளுக்கு தேவையான படுக்கை வசதிகள்,தீவிர சிகிச்சைப் பிரிவு வசதிகள், ஆக்சிஜன் வசதிகள், மருத்துவ வசதிகள் போதுமான மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களை கொண்டு குறையின்றி சிகிச்சை கிடைப்பதை கண்காணிக்கவேண்டும்.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள ஒவ்வொரு மண்டலத்திற்கு ஒருங்கிணைப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள், கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனை முடிவுகளை வெளியிடுதல், மருத்துவ முகாம்கள் நடத்துதல், வீடுகள்தோறும் ஆய்வு மேற்கொள்ளுதல், தொற்று பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிருமிநாசினி தெளித்தல், 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு மையம், மருத்துவர்கள் பணியாளர்கள் போதுமான அளவு இருப்பதை உறுதிசெய்தல், ஆம்புலன்ஸ் வாகனங்கள் தயார் நிலையில் இருத்தல், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் கண்காணிப்பு போன்ற பணிகளை, மேற்கொள்ளவேண்டும்.

மேலும், கோயம்புத்தூர் மாநகர பகுதிகளில், கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களை விரைவாக கண்டறிந்து அவர்களிடமிருந்து பிறருக்கு தொற்று பரவாமல் அவர்களை விரைவாக தனிமைப்படுத்தி தொடர் கண்காணிப்பில் ஈடுபட உதவி பொறியாளர் நிலையில் குழு அமைக்க வேண்டும்.

பொதுமக்களிடையே தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்தி, பொது இடங்களில் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி கடைபிடித்தல் மற்றும் கைகளை முறையாக அடிக்கடி கழுவுதல் போன்ற வழிமுறைகளை பின்பற்ற அரசால் தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

**கோவை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை, இ.எஸ்.ஐ மருத்துவகல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள்,தனியார் மருத்துவமனைகள், கோவிட் கேர் மையங்கள் ஆகியவற்றில் தேவைகளின் அடிப்படையில் படுக்கை வசதிகள் ஏற்படுத்தவேண்டும்.**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் விரைவாக நடைபெற்று வருகிறது. தற்போது, தினந்தோறும் சுமார் 6,000-க்கும் மேற்பட்ட நபர்கள் வரை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், அதிகளவிலான பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 7,327 சிறப்பு மருத்து முகாம்கள் நடத்தப்பட்டு 8இலட்சத்து 76ஆயிரத்து 58நபர்களுக்கு மருத்துவபரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக தினந்தோறும் மாநகர் மற்றும் ஊரகப்பகுதிகளில் தொடர்ந்து மருத்துவமுகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம் அந்தந்தப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி, தேவையற்ற அச்சத்தை போக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் இதுவரை 2 இலட்சத்து 17ஆயிரத்து 338நபர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று பாரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில், (31.08.2020) அன்று வரை 15,490 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.அவர்களில் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று 11,726 நபர்கள் தற்போது வரை பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். பல்வேறு நோய் தொடர்பிலிருந்த 308 நபர்கள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

**தற்போது 3,456 நபர்கள் சிகிச்சையில் உள்ளனர். அவர்களில் 372 நபர்கள் ESI மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும், 150 நபர்கள் கோயம்புத்தூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையிலும், 83 நபர்கள் பொள்ளாச்சி அரசு மருத்துவமனையிலும், 57 நபர்கள் மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையிலும், 35 நபர்கள் மதுக்கரை அரசு மருத்துவமனையிலும், 968 நபர்கள் தனியார் மருத்துவமனைகளிலும், கொடிசியா சிகிச்சை மையத்தில் 1,082 நபர்களும், அன்னூர் சசூரி கல்லூரியில் அமைக்கப்பட்ட மையத்தில் 44 நபர்களும், மத்தம்பாளையம் காருண்யா கல்லூரியில் 161 நபர்களும், பொள்ளாச்சி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 29 நபர்களும், என்.எம். ஹோம் மருத்துவமனையில் 19 நபர்களும், சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், அறிகுறியற்ற வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த 456 நபர்கள் அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டும் உள்ளனர்.**

**கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க, அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகள், அறிகுறியின்றி கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுபவர்களை அந்தந்த பகுதிகளிலேயே தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்க ஏதுவாக** கொடிசியா, பெரியநாயக்கன்பாளையம் கே.டி.வி.ஆர். பொறியியல் கல்லூரி, பொள்ளாச்சி பி.ஏ. கல்லூரி, மேட்டுப்பாளையம் நஞ்சை லிங்கம்மாள் திருமண மண்டபம், பொள்ளாச்சி நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில் மொத்தம் 6,120 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தேவையின்அடிப்படையில் கூடுதலாக படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பிற்குள்ளானவர்களை கொரோனா தொற்றிலிருந்து மீட்டெடுக்கும் சிறப்பு முயற்சியாக, சித்த மருந்துகளைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. அதன்படி, கொடிசியா அரங்கத்தில் அமைக்கப்பட்ட சித்தா முறை சிகிச்சை மையத்தில் 428நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இதில் தற்போது 371 நபர்கள் பூரணகுணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 57நபர்கள் தொடர் சிகிச்சையில் உள்ளனர்.

மேலும், பொது மக்கள் கூடுமானவரை தேவையில்லாமல் வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களுக்காக வெளியில் செல்லும் போது கண்டிப்பாக முகக் கவசம் அணிய வேண்டும். சமூக இடைவெளியை முறையாக கடைப் பிடிக்க வேண்டும். என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**